கழகத்தின் பல வெற்றிகளுக்குச் சொந்தமான மாவட்டம் விருதுநகர்! தமிழ்நாட்டில்

கழக ஆட்சி ஏழாவது முறையும் அமைந்தது என்ற வரலாற்றை எழுத வீரியத்துடன் பணியாற்றுங்கள்!

விருதுநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள் சந்திப்பில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

விருதுநகர், நவ.10- திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (09-11-2024) மாலை, விருதுநகரில் நடைபெற்ற 'விருதுநகர் மாவட்ட நிர்வாகிகளுடன் சந்திப்பு' நிகழ்ச்சியில் பங்கேற்று, 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

அரசின் திட்டங்கள் எந்த வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று கள ஆய்வு செய்வதற்காகப் பல்வேறு மாவட்டங்களுக்குச் செல்லத் திட்டமிட்டு என்னுடைய பயணத்தைத் தொடங்கி இருக்கிறேன். ஆட்சிக்கான கள ஆய்வோடு - கட்சிக்கான கழக ஆய்வும் சேர்த்து நடத்தினால்தான், இந்தப் பயணத்தின் நோக்கம் முழுமையாகும்! அதனால்தான் உங்களையும் சந்திக்க வேண்டும் என்று தலைமைக் கழகத்தில் சொல்லி, இது போன்ற சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

பல வெற்றிகளுக்கு சொந்தமான விருதுநகர் மாவட்டம்!

கோவையைத் தொடர்ந்து விருதுநகர் மாவட்டக் கழக முன்னணியினரான உங்களைச் சந்திப்பதில் பெருமை அடைகிறேன். தேர்தல் நேரங்களில் விருதுநகர் மாவட்டத்தில் மாநாடுகளை நடத்துவதை நாம் வழக்கமாக வைத்திருந்தோம். 2004 நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு விருதுநகரில்தான் 'தென்மண்டல மாநாடு' நடத்தப்பட்டது. அந்தத் தேர்தலில் 40-க்கு 40 பெற்றது தி.மு.க. கூட்டணி! அதேபோல் 2024 தேர்தலில் "நாற்பதுக்கு நாற்பது" முழக்கத்தை முதன்முதலாக 2022 விருதுநகரில் நடந்த கழக முப்பெரும் விழாவில் தான் முன்வைத்தேன்! அதை மாநில மாநாடுபோல் நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர்கள் இருவரும் நடத்திக் காட்டினார்கள். சொன்னதுபோலவே 40-க்கு 40 வரலாற்று வெற்றிய நாம் பெற்றோம்! இப்படிப்பட்ட வெற்றிகளுக்குச் சொந்தமான மாவட்டம், இந்த விருதுநகர் மாவட்டம்.

திராவிட இயக்கத்திற்கு விதை தூவிய மாபெரும் மனிதர்கள் வாழ்ந்த ஊர், இந்த விருதுநகர். விருதைப் பெரியார் வி.வி.இராமசாமி, சிவசண்முக சுந்தரனார், கவிஞர் எம்.எஸ்.இராமசாமி, வாலிபப் பெரியார் ஏ.வி.பி.ஆசைதம்பி, இராஜபாளையம் ஆதி நாராயணன், அருமை அண்ணன் தங்கபாண்டியன், விருதுநகர் பெ.சீனிவாசன், நல்லதம்பி, குன்னூர் சீனிவாசன், தொம்பக்குளம் லிங்கசாமி ஆகியோர் களம் அமைத்துத் தந்த மாவட்டம், இந்த விருதுநகர் மாவட்டம்.

நான் இளைஞரணிச் செயலாளர் ஆனபோது, பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று கழகக் கொடி ஏற்றினேன். அதிலும் குறிப்பாக, விருதுநகர் மாவட்டத்திற்கு அன்றைய மாவட்டச் செயலாளர் என்னுடைய ஆருயிர் அண்ணன் தங்கபாண்டியன் அவர்களின் அழைப்பின்பேரில், விருதுநகர் மாவட்டத்தின் பெரும்பாலான கிராமங்களுக்குச் சென்று கொடியேற்றியவன் நான். என்னுடைய காலடித்தடம் படாத கிராமமே இல்லை என்று சொல்லும் அளவிற்கு விருதுநகரோடு எனக்குப் பாசமும் - நேசமும் - நெருக்கமும் உண்டு.

விருதுநகர் எப்போதுமே கழகக் கோட்டையாக இருக்கும் மாவட்டம். இந்தப் பகுதியை கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்களும், தங்கம் தென்னரசு அவர்களும் மாபெரும் கழகக் கோட்டையாக கட்டி வளர்த்து வருகிறார்கள். அவர்களின் தோளோடு தோள் நின்று நீங்கள் அனைவரும் செயல்படுவதால்தான் அனைத்துத் தேர்தல்களிலும் இங்கு நாம் வெற்றி அடைந்து வருகிறோம்.

மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறீர்கள். அதைப் பாராட்டத்தான் வந்திருக்கிறேன். அதே நேரத்தில் இன்னும் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளவும்தான் வந்திருக்கிறேன்.

மக்களிடம் கழக அரசின் சாதனைகளைச் சொல்ல வேண்டும்!

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 100-க்கு 100 வெற்றியை நாம் பெற்றோம். அதே போன்ற வெற்றியை வரும் சட்டமன்றத் தேர்தலிலும் பெற்றாக வேண்டும். வரும் தேர்தலிலும் நாம்தான் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கப் போகிறோம். அதில் யாருக்கும் எந்த சந்தேகமும் இல்லை. அதை நினைத்துக்கொண்டு மெத்தனமாகவும் இருந்துவிடக் கூடாது. அலட்சியமாகவும் இருந்துவிடக் கூடாது.

மக்களை சந்தித்து நம்முடைய கொள்கைகளை, சாதனைகளைச் சொல்லுங்கள். நம்முடைய ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு குடும்பமும் ஏதாவதொரு வகையில் பயன்பெறும் படி நம்முடைய திட்டங்கள் அமைந்திருக்கிறது. அதை மக்கள் எளிமையாகப் புரிந்து கொள்வது மாதிரி துண்டுப் பிரசுரங்கள் வழங்க வேண்டும்; தெருமுனைக் கூட்டங்கள், திண்ணைப் பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டும்.

அதிக இளைஞர்களை ஈர்த்திட வேண்டும்!

இளைஞர்கள் மற்றும் மகளிரைக் கழகத்தை நோக்கி ஈர்ப்பதற்கான பணிகளை மேற்கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் இருக்கும் இளைஞர்களை அழைத்து, அவர்களைப் பக்கத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இளைஞர்களுக்குக் கொள்கைகளை விதைப்பது மிகவும் முக்கியம். அவர்கள் தான் எதிர்காலத்திற்கான விதைகள். பேச்சாளர்களை அழைத்து பாசறைக் கூட்டங்களைச் சிறு சிறு அளவில் நடத்துங்கள்.

நேற்றுகூட, கொளத்தூரில் நடந்த ஒரு நிகழ்ச்சிக்கு சென்றிருந்தேன். இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட "என் உயிரினும் மேலான" பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற பேச்சாளர்கள் பங்கெடுத்து இருந்தார்கள். இந்தப் போட்டியில் பங்கேற்ற பேச்சாளர்களைப் பயன்படுத்தி நீங்கள் கூட்டங்கள் நடத்த வேண்டும். மாதம் ஒரு சிறு கூட்டம் போதும். ஒவ்வொரு பகுதியிலும் கொள்கை வீரர்களாக 10 அல்லது 15 இளைஞர்களை உருவாக்க வேண்டியது உங்கள் ஒவ்வொருவரின் கடமை!

பெண்களின் ஆதரவை நமது வாக்காக மாற்ற வேண்டும்!

அதேபோல், மகளிருக்காக ஏராளமான திட்டங்களை உருவாக்கியிருக்கிறோம். பெண்கள் ஆதரவை நமக்கான வாக்குகளாக மாற்ற வேண்டியது அவசியம். ஒவ்வொரு பெண் வாக்காளரையும் தேர்தலுக்கு முன்பாக மூன்று முறையாவது சந்திக்க வேண்டும் என்கிற அசைன்மெண்ட் உங்கள் மாவட்டத்தில் இருக்கும் கழகப் பெண் நிர்வாகிகளுக்கு வழங்கப்பட வேண்டும். அவர்கள் சென்று பார்க்கும்போது மகளிருக்கு என்று செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை நோட்டீஸாக அடித்து வழங்கச் சொல்லுங்கள். நம்முடைய சாதனைகளை மக்களுக்கு நினைவூட்டிக் கொண்டே இருப்பது தான் நம்முடைய வேலை.

இங்கு வந்திருக்கும் நிர்வாகிகள் பல்வேறு தொழில்கள் செய்கிறவர்களாக இருப்பீர்கள். உங்களின் வேலையில் கவனம் செலுத்துவது போன்றே, உங்கள் குடும்பத்துக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நேரம் ஒதுக்கிச் செலவிடுங்கள். உங்கள் பணிகளுக்கிடையே ஒரு நாளுக்கு இரண்டு மணி நேரத்தைக் கட்சிக்காக ஒதுக்குங்கள். வார இறுதியில் ஒரு நாளை முழுமையாகக் கழகப் பணிக்கு ஒதுக்குங்கள்.

உங்களுக்கு நான் நிர்ணயித்துள்ள இலக்கு எவ்வளவு? 200. 200 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்றால் கடுமையா உழைக்க வேண்டும்.

> இங்கு வந்திருக்கும் நிர்வாகிகள் பல்வேறு தொழில்கள் செய்கிறவர்களாக இருப்பீர்கள். உங்களின் வேலையில் கவனம் செலுத்துவது போன்றே, உங்கள் குடும்பத்துக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நேரம் ஒதுக்கிச் செலவிடுங்கள். உங்கள் பணிகளுக்கிடையே ஒரு நாளுக்கு இரண்டு மணி நேரத்தைக் கட்சிக்காக ஒதுக்குங்கள். வார இறுதியில் ஒரு நாளை முழுமையாகக் கழகப் பணிக்கு ஒதுக்குங்கள்.

வேட்பாளர் யார் என்று தலைமைக் கழகம் அறிவிக்கும். வெற்றி பெறுபவர் தான் வேட்பாளராக நிறுத்தப்படுவார். அதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம். எனவே, திறமை வாய்ந்தவர் நிறுத்தப்படுவார். அவரைச் சட்டமன்றத்துக்கு அனுப்ப உழைக்க வேண்டியது உங்கள் கடமை.

ஏழாவது முறை ஆட்சி அமைக்க விருதுநகரில் இருக்கும் ஏழு தொகுதிகளிலும் கழகக் கூட்டணி வெற்றி பெற்றது என்ற செய்தி எனக்கு வர வேண்டும். தமிழ்நாட்டில் கழக ஆட்சி அமைந்தது என்ற வரலாற்றை எழுத கழகத்தினர் வீரியத்துடன் செயல்படுங்கள். வெற்றியை ஈட்டித் தாருங்கள்.

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எஸ்.ராஜசேகர் தலைமை!

துறைமுகம் கிழக்கு பகுதி சார்பில் 'என் உயிரினும் மேலான' 6வது தொடர் பேச்சரங்கம்!

கம்பம் செல்வேந்திரன் - இளம் பேச்சாளர்கள் பா.ஸ்ரீலேகா - க.பார்கவி சிறப்புரையாற்றினர்!

சென்னை, நவ.10- கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதல்படி, துணை முதல்வரால் நடத்தப்பட்ட "என் உயிரினும் மேலான" பேச்சுப்போட்டியில் பட்டைத் தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் பங்கேற்ற கருத்தியல் 6 வது தொடர் பேச்சரங்கம் கழக தேர்தல் பணி செயலாளர் கம்பம் செல்வேந்திரன், இளம் பேச்சாளர்கள் செல்வி பா. ஸ்ரீலேகா, செல்வி பார்கவி ஆகியோர் உரையாற்றினர்.

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் கிழக்கு பகுதி சார்பில், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி, கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் "என் உயிரினும் மேலான" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பேச்சு போட்டியில் பட்டைத் தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் பங்கேற்கும் கருத்தியல் 6 வது தொடர் பேச்சரங்கம், நேற்று (09.11.2024) மாலை 6.00 மணியளவில் சென்னை, பிராட்வே, ஹையத் மஹாலில், சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர், இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், துறைமுகம் கிழக்கு பகுதி செயலாளர் எஸ். ராஜசேகர் தலைமையில் 500க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவியர்கள் ஆர்வமுடன் பங்கேற்ற பேச்சரங்கத்தில், கழக தேர்தல் பணி செயலாளர் கம்பம் செல்வேந்திரன், இளம் பேச்சாளர்கள் செல்வி பா. ஸ்ரீலேகா "எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும்! திராவிடம் அதை படைக்கும்!" என்ற தலைப்பிலும் செல்வி க.பார்கவி "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற தலைப்பிலும் உரையாற்றினர்.

இப்பேச்சரங்கத்தில், மேயர் பிரியாராஜன், தமிழன்பிரசன்னா, பி.எம். யாழினி, தொகுதி பொறுப்பாளர்: இரா நரேந்திரன், துறைமுகம் மேற்கு பகுதி செயலாளர் எஸ். முரளி, எம். விஜயகுமார், ஜி.எம்.தேவன் இசட்.ஆசாத், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, பி. ஸ்ரீராமுலு, ராஜேஷ் ஜெயின், பி.பரிமளம், எல்.சம்பத்குமார், கே.விநாயகம், பி.விஜயகுமார், பா.பிரதீப் குமார், ஆர்.கலைச்செல்வி, எம்.இ.கனி, பா.ஜெகதீஷ், கே.ஆர்.அபரஞ்சி, மே. ஜனார்த்தனன், மா.முத்துக்குமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, சே.தமிழ்வாணன், வெ.சந்தானலட்சுமி, சி.ப. ஜெயராமன், எம் ஜெய்சங்கர், ஆர்.ரவிச்சந்திரன், பா.கதிரவன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி. சதீஷ் குமார், வே.பா.பிரபாகரன், எல். சத்யநாராயணன், எஸ். புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், கே. கவியரசு, ஆ.நா. பார்த்திபன் மற்றும் துறைமுகம் கிழக்கு மேற்கு பகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட, பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், பாக முகவர்கள் பிஎல்சி உறுப்பினர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் இப்பேச்சரங்கத்தில் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கழக சாதனை துண்டு பிரசூரம், கையேடு மற்றும் எழுதுகோல் வழங்கப்பட்டது.

இப்பேச்சரங்கத்தில் வட்ட கழக செயலாளர்கள் டி.கதிரவன்(எ)ராஜா, எம். பரத்குமார் நன்றி தெரிவித்தனர்.

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் கிழக்கு பகுதி சார்பில், "என் உயிரினும் மேலான என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பேச்சு போட்டியில் பட்டைத் தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் பங்கேற்கும் கருத்தியல் 6 வது தொடர் பேச்சரங்கம், மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு முன்னிலையில், துறைமுகம் கிழக்கு பகுதி செயலாளர் எஸ். ராஜசேகர் தலைமையில் 500க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவியர்கள் ஆர்வமுடன் பங்கேற்ற பேச்சரங்கத்தில், கழக தேர்தல் பணி செயலாளர் கம்பம் செல்வேந்திரன், இளம் பேச்சாளர்கள் செல்வி பா. ஸ்ரீலேகா "எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும்! திராவிடம் அதை படைக்கும்! என்ற தலைப்பிலும் செல்வி க.பார்கவி "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற தலைப்பிலும் உரையாற்றினர்.

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் இன்று நடைபெறுகிறது!

வாக்குச்சாவடி நிலை முகவர்கள் - தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் தலைமை! டி.ஆர்.பாலு எம்.பி. - ஆர்.எஸ். பாரதி சிறப்புரை!

காஞ்சிபுரம், நவ.10 ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் - தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் இன்று (10.11.2024) காலை நடைபெறுகிறது.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சவாடி நிலை முகவர்கள் (BLA2) தேர்தல் பணிக்குழு) உறுப்பினர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் இன்று (10.11.2024) காலை 9.00 மணியளவில் பரணிபுத்தூரில் உள்ள சக்தி பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்குகிறார். குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

ஆலந்தூர் தெற்குப் பகுதி செயலாளர் என்.சந்திரன், ஆலந்தூர் வடக்குப் பகுதி செயலாளர் பா.குணாளன், கண்டோன்மெண்ட் நகரச் செயலாளர் டி.பாபு, புனிததோமையர் மலை வடக்கு ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, ஆலந்தூர் தொகுதி பார்வையாளர் - கழக மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ் காந்தி, கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் - குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன், கழக தொழிலாளர் அணி செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ், கழக சுற்றுச் சூழல் அணி துணைச் செயலாளர் சாய் ஜெய்காந்த் பாரதி, கழக பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே. இப்ராகிம், எத்திராஜ், எஸ். சதீஷ், ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், இரா.பாஸ்கரன், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் தி.க. பாஸ்கரன், டி. எஸ்.எம். .ஜேயகரன், ஆர். ஆர்.ஜெயராம், மார்த்தாண்டன், கே.ஆர்.ஆனந்தன், டி. ஆர்.சாரதி பெரியநாயகம் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

முடிவில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் நன்றியுரையாற்றுகிறார்.

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம் அருங்குன்றம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாமினை துவக்கி வைத்து 10 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் எல். இதயவர்மன், திருப்போரூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் பையனூர் சேகர், பேரூர் செயலாளர் மு.தேவராஜ் ஆகியோர் உள்ளனர்.